**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 23.03.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மேட்டுப்பாளையம் வனக் கல்லூரியில் தொழில்துறை வேளாண் வனவியல் கூட்டமைப்பின் வருடாந்திர கருத்தரங்கம்**

மேட்டுப்பாளையத்திலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் - 21 மற்றும் 22 மார்ச் 2023 ஆகிய தேதிகளில் ஆறாவது தொழில்துறை வேளாண் வனவியல் கூட்டமைப்பின் (CIAF) கருத்தங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் வனக்கல்லூரியின் முதல்வர் மற்றும் தொழில்துறை வேளாண் வனவியல் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.த. பார்த்திபன் வரவேற்புரை ஆற்றி வேளாண்காடுகளை தொழில்துறை வேளாண் காடுகளாக மாற்றியதில் தொழில்துறை வேளாண் வனவியல் கூட்டமைப்பின் (CIAF) பங்கை எடுத்துரைத்தார்.

கூடுதல் முதன்மை வன பாதுகாவலர் மற்றும் தலைமை இயக்குநர், பசுமை தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு வனத்துறை, திரு. தீபக் ஸ்ரீவஸ்தவா (இந்திய வன பணி), முதன்மை விருந்தினராக பங்கேற்று தனது சிறப்புரையில் நமது நாட்டின் பூர்வீக மர இனங்களை அதிக அளவில் நடுவதன் மூலம் மர இறக்குமதியைக் குறைக்க கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக எடுத்துரைத்தார். பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் (ஜிடிஎம்) குறிக்கோளான வனப்பகுதியை 23.69 % இருந்து 33 % அதிகரிக்க, 12,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் மரங்கள் நட வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக தெரிவித்தார். இதில் 8000 முதல் 10000 ச.கி.மீ பரப்பளவானது விவசாய நிலங்களில் மரம் நடுவதற்கு ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்தினார். பசுமைத் தமிழ்நாடு இயக்கமானது மக்களின் திட்டமாக செயல்பட வேண்டும் என்பதால் விவசாயிகள், பொதுமக்கள், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் அரசாங்கத்துடன் கைகோர்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

மர வளர்ப்புத் திட்டங்களின் மூலம் ழுழுழு (பசுமை இல்ல வாயுக்கள்) உமிழ்வைக் குறைப்பதன் மூலம் கார்பன் நடுநிலைப்படுத்தலை அடைய இத்திட்டமானது உதவும். இதுவரை GTM இன் கீழ் நடப்பட்ட 2.5 கோடி நாற்றுகளில், இதுவரை 2.0 கோடிகள் கண்காணிப்பு மற்றும் கார்பன் பணமாக்குதலுக்காக ஜியோடேக் செய்யப்பட்டுள்ளது. மேலும், தொழில்துறை வேளாண்

வனவியல் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தங்களை ஜிடிஎம் இணையதளத்தில் (www.greentnmission.com) பதிவு செய்யுமாறு வலியுறுத்தினார்.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி மையத்தின் இயக்குநர் முனைவர் தே. சுரேஷ்குமார், தனது பாராட்டுரையின் போது, விவசாயிகளுக்கு தொடர்ச்சியான வருமானத்தை உறுதி செய்வதில் பல்நோக்கு வேளாண் காடுகளின் பங்கை எடுத்துரைத்தார். மாநிலத்தில், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சந்தைபடுத்துதலில் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விவசாய உற்பத்தியாளர்கள் அமைப்புகளுடன் (TNAU – EPO Linkage) இணைப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது என கூறினார்.

நபார்ட் வங்கியின் கோவை மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. சி. திருமல் ராவ் மற்றும் கோவை ஐடிசி நிறுவனத்தின் முதன்மை மேலாளர் திரு. எம். வீரமணி ஆகியோர் விழாவிற்கு வாழ்த்துரை வழங்கினார். வனங்களுக்கு வெளியே மரங்கள் (TOFI) திட்டத்தின் துணை இயக்குநர் திரு. மனோஜ் தபாஸ், தமிழ்நாட்டின் வனப்பரப்பை அதிகரிக்க TOFI திட்டம் தமிழ்நாட்டில் பசுமை தமிழ்நாடு இயக்கத்துடன் இணைந்து செயல்படும் என்று தெரிவித்தார்.

மேலும் இக்கருத்தரங்கில் தொழில்துறை வேளாண் காடுகளின் பல்வேறு அம்சங்கள், மர வளர்ப்பு நடைமுறைகள், மரங்களின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் பற்றிய செயல்விளக்கம் மற்றும் சந்தை வாய்ப்புகள் பற்றிய கருத்துகள் விவாதிக்கப்பட்டன. மேலும் மரம் சார்ந்த ஆற்றல் திட்டம் மற்றும் நபார்ட் வங்கியின் வேளாண் வனவியல் சார்ந்த தொழில் ஊக்குவிப்பு மையம் ஆகியவை தொடங்கி வைக்கப்பட்டது. தமிழக அரசின் கீழ் செயல்படும் தொழில் முனைவு மற்றும் புத்தாக்க நிறுவன (EDII) புத்தாக்க பற்று சீட்டு திட்டத்தின் (IVP) மூலம் தொழில் முனைவோருக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. மேலும் சிறப்பாக செயல்பட்ட வேளாண் வனவியல் விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. சிறந்த விவசாயி விருது திரு. கே.சி. சரவணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. கோயம்புத்தூர் வேளாண் காடு வளர்ப்பு உற்பத்தியாளர் அமைப்பு சிறந்த FPO விருதையும், சிறந்த குளோனல் நர்சரிக்கான விருதினை K3 நாற்றங்கால் திரு. ராமமூர்த்தி அவர்களுக்கும், சிறந்த மதிப்பு கூட்டல் துறை விருத்தினை திரு. குருவாயூரப்பன் அவர்களும் பெற்றனர். வாழ்நாள் சாதனையாளர் விருது திரு. யோகநாதன் மற்றும் திரு. ஜெகன் ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இறுதியாக வனப் பொருட்கள் மற்றும் வனவிலங்கு துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஐ. சேகர் நன்றியுரை ஆற்றினார். இப்பயிலரங்கில் துறை தலைவர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் என மொத்தம் **850** உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**